Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 89

திங்கட்கிழமை
23 பெப்ரவரி 2026

மாசி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## பழைய வரைவுகளின் உதவியுடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கம்

### நீதி அமைச்சர் ஹர்ஷன தகவல்

**கொழும்பு, பெப்ரவரி 23**

**புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகளை ஆரம்பத்திலிருந்தோ அல்லது பூச்சியத்தில் இருந்தோ தொடங்க வேண்டிய அவசியம் இல்லை என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் தயாரிக்கப்பட்ட வரைவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிகளைத் தொடர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

»11



## துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சிறுவனுக்கு நீதிகோரி போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.23
அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிந்த சிறுவனுக்கு நீதிவேண்டி நேற்று யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

»11

## புதிய 7 மேல் நீதிமன்றங்கள் ஒரு மாதத்துக்குள் இயங்கும்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.23
கொழும்புப் பிராந்தியத்தில் உருவாக்கப்படவுள்ள புதிய ஏழு மேல் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் எதிர்வரும் ஒரு மாதத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ள

»11

## கிளிநொச்சி, முல்லைத்தீவில் 82,170 வெடிபொருள்கள் அகற்றம்

விரிவு பக்கம்:- 02

## 3,900 மெ.தொன் எரிவாயுடன் நாட்டை வந்தடைந்தது கப்பல்

கொழும்பு, பெப்.23
3 ஆயிரத்து 900 மெற்றிக்தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது.
லிட்ரோ எரிவாயு நிறுவனத்தை மேற்கோள் காட்டி அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்,
இதைப் பயன்

»11

## சமச்சீரற்ற ஆசிரியப் பரம்பலால் மாணவரின் உரிமைகள் பாதிப்பு

### கல்வி அமைச்சருக்கு ரவிகரன் எம்.பி. கடிதம்



முல்லைத்தீவு, பெப்.23
வடக்கு மாகாணத்தில் நிலவும் சமச்சீரற்ற ஆசிரியர் பரம்பலால் பாதிக்கப்பட்டுள்ள வன்னி மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்க விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்

»11

## மழைக் காலநிலை படிப்படியாக விலகும்

கொழும்பு, பெப்.23
தென்மேற்கு வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் நிலவும் குறைந்த அழுத்தப் பிரதேசம் நாட்டை விட்டு விலகிச் செல்வதால், தற்போது நிலவும் பலத்த மழை நிலைமை படிப்படியாகக் குறையும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

»11

## பாடசாலைகளில் நிதி வசூல் தடையின்றித் தொடர்கிறது

### இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.23
பாடசாலைகளில் நிதி வசூலிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அண்மையில் அறிவித்திருந்தபோதும், பாடசாலைகளில் பெற்றோரிடம் தொடர்ச்சியாக நிதி வசூலிக்கப்படுகின்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

»11

## இன அழிப்பு மீள நிகழாமையை உறுதி செய்யவேண்டும் அரசு



### ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி பேராளர் மாநாட்டில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.23
இன அழிப்புச் செயற்பாடுகள் மீள நிகழாமையை உறுதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேராளர் மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
இந்தத் தீர்மானம் உட்பட 15 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் முதலா

»11



முச்சந்தி முராரி

"இப்பத்தை பிள்ளையளை வருங்காலத்தில வசூல்ராஜாக்களா மாத்துறதுக்கு இப்பிடி பள்ளிக்கூடங்களில பயிற்சி குடுக்கினம் போல"

## கிருமித்தொற்றால் ஆசிரியை மரணம்

யாழ்ப்பாணம், பெப்.23
இளம் ஆசிரியை ஒருவர் கிருமித்தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம், தையிட்டியைச்சேர்ந்த தே. துளக்சிகா ஜெசி (வயது-32) என்பவரே

»11

### மின்கட்டண அதிகரிப்பு

## மக்களின் கருத்தறிய 25 முதல் நடவடிக்கை

கொழும்பு, பெப்.23
இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக மின்சார சபையால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைத்திட்டம்பற்றிய மக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் நடவடிக்கை

»11

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுனியா, பெப்.23
வவுனியா, கட்டையர்குளம் பறங்கியாற்றில் இருந்து நேற்றுமுன்தினம் காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
பறங்கியாற்றைச் சேர்ந்த 42 வயது

»11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 22.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4355
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 11 32 54 67
விசேட எழுத்து: X

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி: 22.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1422
வெற்றி இலக்கினம்: தனு
வெற்றி இலக்கங்கள்: 14 22 31 47

**NLB ஜய**
திகதி: 22.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0381
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 6 5 3 5

**மெகா பவர்**
திகதி: 22.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2461
ஆங்கில எழுத்து: A
சுப்பர் இலக்கம்: 01
வெற்றி இலக்கங்கள்: 07 40 52 55


**மஹஜன சம்பத**
திகதி: 22.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6113
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 0 1 3 7 9 6

**தன நிதானய**
திகதி: 22.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2143
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கங்கள்: 01 05 06 81
விசேட எழுத்து: I

**சுப தவசக்**
திகதி: 22.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0229
வெற்றி இலக்கினம்: கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 20 49 53

# முல்லைத்தீவு, கிளிநொச்சியில் 82,170 வெடிபொருள்கள் அகற்றம்

## ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு



**கொழும்பு,பெப்.23**

**இலங்கையின் வடபகுதியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கண்ணி வெடியகற்றும் பணிகளில் ஈடுபட்டுவரும் ஸார்ப் மனிதாபிமான நிறுவனம் இதுவரை சுமார் 82,170 அபாயகரமான வெடிபொருள் களைப் பாதுகாப்பாக அகற்றியுள்ளதாக அறிவித்துள்ளது.**

இதுகுறித்து ஸார்ப் நிறுவனத்தின் முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவிக்கையில்,

ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தப் பணிகளில் இதுவரை 3,778,161 சதுரமீற்றர் பரப்பளவிலிருந்து 82,170 அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின்கீழுள்ள தச்சடம்பன், அம்பகாமம், ஒழுமடு, மாங்குளம் மற்றும் கொக்காவில் பகுதிகள், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகள், கிளிநொச்சி பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவுப் பகுதிகள் மற்றும் கண்டாவளை தட்டுவன் கொட்டி பகுதிகள் ஆகியவற்றிலிருந்து வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன. மீள்குடியேற்றம் மற்றும் மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக இந்த நிலங்களைமீள ஒப்படைக்கும் பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன- என்றார். (ச-55)

**கொழும்பில்**

# கிராம அலுவலர்கள் மௌனப்போராட்டம்

கொழும்பு,பெப்.23

இலங்கையில் 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் கிராம உத்தியோகத்தர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் தமக்கு இழைக்கப்படும் தொடர்ச்சியான அநீதிகளுக்கு எதிராகத் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சேவைப் பிரமாணத்தின் ஊடாகத் தமக்குரிய பதவி உயர்வுகள் மற்றும் சலுகைகளில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது குறித்து பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருடன் பல கட்டங்களாகப் பேச்சுகள் நடத்தப்பட்டன. இருப்பினும் அரசாங்கத்திடம் இருந்து இதுவரை எவ்வித சாதகமான பதில்களும் வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். அதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி கொழும்பில் உள்ள பொது நிர்வாக அமைச்சின் முன்பாக மிகப்பெரிய மௌனப்போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு ஏனைய கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கங்களும், நிர்வாக கிராம உத்தியோகத்தர் சங்கங்களும் தமது முழுமையான ஆதரவை வழங்க முன்வந்துள்ளன.

தமது நியாயமான கோரிக்கைகளுக்கு இந்த மௌனப்போராட்டத்தின் பின்னரும் தீர்வு கிடைக்காவிட்டால், எதிர்வரும் காலங்களில் நாடளாவிய ரீதியில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (ச-இ)



பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்கக் கோரி திருகோணமலை சிவன் கோயிலுக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கையெழுத்துப்போராட்டம் இடம்பெற்றது. இதில் திருகோணமலையிலுள்ள மக்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ச)

**சுபிரி தன சம்பத**
திகதி: 22.02.2026 | தினம்: ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம்: 0821
ஆங்கில எழுத்து: J | வெற்றி இலக்கம்: 6 4 0 4 3 4

**Super Ball** DLB
திகதி: 22.02.2026 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3087 | ஆங்கில எழுத்து: V | வெற்றி இலக்கம்: 03 05 42 76

**சனிதா** DLB
திகதி: 22.02.2026 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: Z | வெற்றி இலக்கம்: 03 04 10 73 | வெற்றி வாரம்: 5248

**SASIRI** DLB
திகதி: 22.02.2026 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 0917 | வெற்றி இலக்கம்: 20 22 38

**லக்ன ராசி** DLB
திகதி: 22.02.2026 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
கன்னி | வெற்றி இலக்கம்: 22 29 32 56 | சீட்டிழுப்பு வாரம்: 4799

**KAPRUKA** DLB
திகதி: 22.02.2026 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: W | சுப்பர் இலக்கம்: 26 | வெற்றி இலக்கம்: 01 36 38 40 | வெற்றி வாரம்: 2263

**அத கோடிபதி** DLB
திகதி: 22.02.2026 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: S | வெற்றி இலக்கம்: 05 24 39 56 | வெற்றி வாரம்: 2913



**தேவேந்திரமுனை**

# துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் பலி

கொழும்பு,பெப்.23

கந்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவேந்திரமுனை பகுதியில் அடையாளந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்துள்ளது.

கார் ஒன்றில் வருகைதந்த சிலர் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது காயமடைந்த நபர் சிகிச்சைக்காக மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையில் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் மீன் வியாபாரி என்று கூறப்படுகிறது. சம்பவம் குறித்து பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)

**கொலை வழக்கு**

# 20 ஆண்டுகளின்பின்னர் மரணதண்டனை விதிப்பு

கொழும்பு,பெப்.23

கொலைக்குற்றச்சாட்டில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட இருவருக்கு பலப்பிட்டிய உயர்நீதிமன்ற நீதிபதி பிரியந்த லியனகே மரணதண்டனை விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தார்.

இவர்கள் இருவரும் கடந்த 2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் 4ஆம் திகதி பலப்பிட்டிய, மதுவ பகுதியில் வைத்து நபரொவருரை வெட்டிக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டனர்.

சம்பவம் நடந்தபோது முதலாம் நபருக்கு 16 வயதும், இரண்டாம் நபருக்கு 30 வயதும் காணப்பட்டது. அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி தனது தீர்ப்பில் அறிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகவியலாளருக்கு நீதிகோரி பருத்தித்துறையில் போராட்டம்!

**யாழ்ப்பாணம், பெப்.23**

**சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட, வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த ஊடகவியலாளர் சுப்பிரமணியம் இராமச்சந்திரன் எங்கே? அநுர அரசே பதில் சொல் என வலியுறுத்தி யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறையில் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் செயற்பாட்டாளரும் மூத்த ஊடகவியலாளருமான மு.மதிவாணன் தலைமையில் இடம்பெற்ற போராட்டத்தில் இராமச்சந்திரன் கைதுசெய்யப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட சம்பவம் ஆற்றுகை செய்யப்பட்டது. இதன்போது ஊடகவியலாளர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரது உறவுகள், பொ.பொ. மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைத்தலைவரும், சிவகுரு ஆதீனக் குருமுதல்வருமான தவத்திரு வேலன்சுவாமிகள், பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல், வல்வெட்டித்துறை நகரபிதா எம்.கே.சிவாஜிலிங்கம், கரவெட்டிப் பிரதேசசபை உபதவிசாளர் தயாபரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன், குரலற்றவர்களின் குரல், வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு, பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் உள்ளிட்ட பொது அமைப்புகள், அரசியற்கட்சியினர் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (ச-100-66)

## பருத்தித்துறையில் 1000 கிலோ கஞ்சா தீயிட்டு அழிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.23

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தினால் 1000 கிலோ கேரளக் கஞ்சா போதைப்பொருள் நேற்று ஞாயிற்றுக்கிழமை தீயிட்டு அழிக்கப்பட்டது.

பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு சான்றுப்பொருள்களாக நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட கேரளக் கஞ்சா போதைப்பொருளே இவ்வாறு தீயிட்டு எரித்தழிக்கப்பட்டுள்ளது. வலிக்கண்டிப் பகுதியில் உள்ள பருத்தித்துறை நகர சபைக்குச் சொந்தமான இடத்தில், பருத்தித்துறை நீதவான் இந்துஜா சிவலிங்கம் முன்னிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ச-100)

## சட்டத்தரணி சுட்டுக்கொலை துப்பாக்கிதாரி கைது

கொழும்பு,பெப்.23

அக்குரேகொட பிரதேசத்தில் சட்டத்தரணி மற்றும் அவரது மனைவி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் துப்பாக்கிதாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, துப்பாக்கிச்சூட்டுக்கு முன்னர் துப்பாக்கிதாரியை பன்னிப்பிட்டி தங்குமிடத்துக்கு அழைத்து வந்த நபர் ஒருவர் தாய்லாந்துக்குத் தப்பிச்சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அதற்கமைய துப்பாக்கிதாரியை ஏற்றிச்சென்ற காரும், நாட்டைவிட்டுத் தப்பிச்சென்ற நபர் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்கு செல்வதற்காக வாடகைக்கு அமர்த்திய காரும் நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)



## மன்னாரில் சுகாதாரமின்றி இயங்கிய உணவகங்கள் சிக்கின!

மன்னார்,பெப்.23

மன்னார் நகரசபை எல்லைக்குள் சுகாதார விதிமுறைகளை மீறிச்செயற்பட்ட நான்கு உணவகங்கள்மீது கடந்த ஒரே வாரத்தில் சுகாதாரத் துறையினர் கடும் சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட தொடர்ச்சியான முறைப்பாடுகளையடுத்து மன்னார் நகரசபை சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அதிகாரிகள் இணைந்து இந்த விசேட சோதனைகளை முன்னெடுத்தனர். தாழ்வுபாடு பிரதான வீதி பகுதியில் உள்ள 2 உணவகங்கள், உப்புக்குளம் பகுதியிலுள்ள உணவகம் ஒன்று மற்றும் பள்ளிமுனை வீதியிலுள்ள உணவகம் ஒன்று மனித ஆரோக்கியத்துக்கு ஊறுவிளைவிக்கும்வகையில் இயங்கியமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து குறித்த நான்கு உணவகங்களுக்கும் எதிராகச் சுகாதார அதிகாரிகளால் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ச-56)




## எங்கட பிள்ளையள் பட்டதடியள் இல்லை!

**நே**ற்றையோட யாழ்ப்பாணக் கம்பஸின்ர 40ஆவது பட்டமளிப்பு விழா முடிவுக்கு வந்திருக்கு. 3,252 பிள்ளையள் பட்டத்தைப் படிச்சு முடிச்சுப்போட்டு, கறுப்பு அங்கி போட்டுக்கொண்டு பட்டதாரியளா வெளியில வந்திருக்கினம். பார்க்கச் சந்தோசமாத்தான் கிடக்கு. ஆனா இதில எத்தனை பேர் இனிமேல் வருசக்கணக்கா வேலை கிடைக்காமல் வீதியில நிக்கப்போற 'வேலையில்லாப் பட்டதாரி' பட்டியலில சேரப்போகினமோ எண்டதை நினைச்சாத்தான் பிறஷர் ஏறுது. ஒவ்வொரு வருசமும் இப்பிடி அள்ளு கொள்ளையாப் பட்டதாரியள் வெளியேறுகினம் , ஆனா அவையின்ர கையில இருக்கிற பட்டத்துக்கும் வெளியில இருக்கிற வேலைக்கும் ஏதும் சம்பந்தம் இருக்கோ எண்டதுதான் இண்டைக்கிருக்கிற பெரிய கேள்வி.

தாங்கள் பட்டதாரியானபடியால அரசாங்கம் தங்கத் தாம்பாளத்தில நல்ல சம்பளத்தோட, வீட்டு வாசலோட இருந்து செய்யிறமாதிரி ஒரு வேலையைத் தருமெண்டதுதான் அவையின்ர எதிர்பார்ப்பா இருக்குது. ஆனால் யதார்த்தம் அப்பிடியில்லை. போட்டிப்பரீட்சையில போய் கேள்விக்கு விடை எழுதத் தெரியாமல் கோட்டை விடுற பட்டதாரியள் கனபேர். அதைவிட அவை படிச்சது ஏதோ ஒரு பாடமா இருக்கும், செய்யிற வேலை இன்னொண்டா இருக்கும். உதாரணத்துக்கு டான்ஸ் படிச்ச பிள்ளையொண்டுக்கு விவசாயத் திணைக்களத்தில கிளறிக்கல் வேலை ( இப்ப அதை 'டி.ஓ'எண்டு சொல்லுகினம்) கிடைக்குதெண்டு வைச்சுக்கொள்ளுவம். இந்தக் கிளறிக்கல் வேலையை அவா என்ன டான்ஸ் ஆடிக்கொண்டோ செய்யப்போறா? இல்லைத்தானே. அப்ப அவாவுக்கு டான்ஸ் ரீச்சர் வேலையைத்தானே குடுக்கோணும். ஆனால் இஞ்ச அப்பிடிக் குடுக்கிறேலை. கேட்டால் 'கார்டர் ( ஆளணி வெற்றிடம்) இல்லை'எண்டு கையை விரிப்பினம். அப்ப என்னவேலை கிடைக்குதோ அதுக்குத் தானே பட்டதாரியள் போவினம். ஆனால் அதை அவை வடிவாச் செய்வினமோ எண்டது கேள்விக்குறி. 'கம்பஸில நாலுவருசம் குப்பைகொட்டினதுக்கு ஏதும் மனேஜ்மெண்ட் கோர்ஸ் செய்திட்டு வேலைக்கு வந்திருக்கலாம்' எண்டு அப்ப அவைக்கு மனம் சொல்லும்.

இதுக்கெல்லாம் காரணம் அந்தப் பிள்ளையள் இல்லை. எங்கட பல்கலைக்கழகங்கள் தான். இண்டைக்கு வரைக்கும் எங்கட கம்பஸ்கள் 'புத்தகப்பூச்சிகளை'தான் உற்பத்தி செய்து தள்ளுதுகள். உலகத்தில என்ன நடக்குது, இப்ப என்ன ரெக்னோலஜி வந்திட்டுது. ஏ.ஐ. யில என்னென்ன செய்யலாம்? எண்டதே தெரியாமல் பழங்காலத்துப் பாடத்திட்டத்தையே வைச்சுக்கொண்டு 'படி படி' எண்டு பிள்ளையளைப் போட்டு அமத்துகினம். சும்மா தியரியைப் பாடமாக்கிப் பட்டம் வாங்குறதால ஒரு பிரியோசனமுமில்லை ஏ.ஐ. எண்டாலே என்னெண்டு தெரியாத, இன்ரர்வியூவில தன்னம்பிக்கையோட கதைக்கத் தெரியாத பட்டதாரிகளுக்கு எந்தப் பிரைவேட் கொம்பெனிக்காரன் வேலை குடுப்பான்?


பாடத்திட்டத்தில மாற்றம் வரேணும், பிள்ளையளுக்கு வெறும் ஏட்டுச் சுரைக்காயைச் சொல்லிக்குடுக்காமல் தொழிற்றுறைக்குத் தேவையான திறமைகளை வளர்க்கோணும். அரசாங்க வேலைதான் கதி எண்டு காத்துக்கொண்டு, வீதியில இறங்கிப் போராடுற 'பட்டதடி'களாக மாறாமல், தனியார் துறையிலயும் சுய தொழில்லயும் கால் பதிக்கிற திராணி எங்கட பிள்ளையளுக்கு வரேணும். அதுக்கு முதல்ல யுனிவர்சிட்டி படிப்பு வெறும் கடுதாசியோட நிக்காமல், வாழ்வாதாரத்துக்கு வழி செய்யிற படிப்பாக மாறோணும். இல்லாட்டி வருசா வருசம் கச்சேரிக்கு முன்னால பதாகையளைப் பிடிச்சுக்கொண்டு போராடுறதுதான் எங்கட பட்டதாரிகளிண்ட விதியாயிடும் கண்டியளோ!

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வாழ்வக மாணவர்களுக்கு பொதுக்கலைமாணிப்பட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.23

சுன்னாகம் வாழ்வகத்தைச் சேர்ந்த விழிப் புலனற்ற மாணவர்கள் இருவருக்கு, பொதுக்கலைமாணிப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது. துரைராசா அருண்குமார், சிவபாதசுந்தரம் அனந்தினி ஆகியோர் இந்தப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, தொடர்ச்சியாக மூன்று நாள்கள் நடைபெற்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் இருவருக்கும் குறித்த பட்டம் வழங்கப்பட்டது.

பார்வை இழந்தும், கல்வியில் சாதித்த இருவரையும் பலரும் பாராட்டிவருகின்றனர். (க-27)



சுன்னாகம் வருசப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவம் நடைபெறும். (ச-66)

## பிறரன்பே விண்ணகத்தில் நெடுஞ்சாலை

இறைவார்த்தைப் புத்தகத்தில் விண்ணக இறுதித்தீர்வை நாளில் எமக்கான வெகுமதி விசாரணை நடைபெறும்போது இறைவன் வினா தொடுக்கும் பகுதியில் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது. 'சபிக்கப்பட்டோரைப் பார்த்து நான் பசியாய், தாகமாய் இருந்தேன் .நீங்கள் உணவே நீரோ கொடுக்கவில்லை. ஆடையின்றி அந்நியராய் இருந்தேன். நீங்கள் என்னைக் கவனிக்கவில்லை. நோயுற்றும் சிறையிலும் இருந்தேன் எனக்கு ஆறுதல் தரவில்லை. எனவே அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள்' என்றுள்ளது.

எமது அன்றாட வாழ்வில் இவ்வாறானவர்களைக் கண்டும் காணாது செல்வம் இருந்தும் உதவாது அக்கறையின்றி கடந்து செல்லவில்லையா? தேவையில் உள்ளோருக்கு உதவிக்கரம் நீட்டுவதே உண்மையான கடவுள் வழிபாடு. ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்றோர், பேரிடரால் பாதிக்கப்பட்டோரின் தேவைகளைப் பூர்த்திசெய்வதே கடவுள் விரும்பும் அறச்செயல்.

'மிகச் சிறியோராகிய என் சகோதர, சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்'(மத் 25; 45).

இறைவன் உலகிலுள்ள அனைத்து விளிம்புநிலை மனிதர்களிலும் தம்மை அடையாளப்படுத்துகின்றார். எமது நாளின் நிறைவில் எமது செயல்களைக் கொண்டே பரிசோதிக்கப்படுகின்றோம். எமது சகோதர, சகோதரிகளில் அயலானில் அக்கறை கொள்கின்றோமா? அல்லது பாராமுகத்துடன் வெற்றுச் சடங்குகள், ஆசாரங்கள், வெளிவேடங்கள் மூலம் இறைவனுக்கு அண்மையில் இருப்பதாக நடிக்கின்றோமா? இறையருள் பெற்று முகம் தொலைத்த தடம் மாறிய உரிமை மறுக்கப்பட்ட மக்களில் இறைவன் இயேசுவைக் கண்டு பணியாற்றுவோம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

## ஆண்டுவிழாவையொட்டி மாணவர்களிடையே போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.23

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 78ஆவது ஆண்டு விழா எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது,

இதனையொட்டி பாடசாலை மாணவர்களிடையே கல்விசார்ந்த பேச்சுப்போட்டிகள், சித்திரப்போட்டிகள், கவிதைப்போட்டிகள், கணிதப்போட்டிகள், சிங்கள மொழிப்போட்டிகள், நடனப் போட்டிகள் என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் இளைஞர் யுவதிகளிடையே மரதன் ஓட்டப்போட்டிகள், மற்றும் ஏனைய விளையாட்டுகளும் நடைபெறவுள்ளதாக சனசமூக நிலையத் தலைவர் ந.ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார். (ச-131)

## யாழ்.நூலகத்தில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்புமாத இறுதி நாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை முற்பகல் மணிக்கு, பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பொதுசன நூலக பிரதம நூலகர் திருமதி சி.அனுசியா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி வி.மதிவதனி, சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகரசபை ஆணையாளர் ச.கிருஷ்னேந்திரன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ப.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (க159)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் குறையும். தாய்வழி உறவினர்களால் குடும்பத் தில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள். எடுத்த காரியத் தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். பிள்ளைகள்வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படும்.

**துலாம்:** மனதில் குழப்பங்கள் நீங்கி உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடிவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் காரியங்கள் முடிவதில் இருந்து வந்த இழுபறி நிலை மாறி, அனுகூலமாகமுடியும். வெளியூர்ப்பயணம் தவிர்க்கவும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**மீனம்:** சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு நவீன டிசைனில் புதிய ஆடைகளை வாங்கும் யோகம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# மண்டைதீவு மைதானம் மீள்பரிசீலனை அவசியம்

மண்டைதீவுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானப் பணிகள், சுற்றுச்சூழல் தொடர்பான உரிய அனுமதிகள் பெறப்படாமல் மேற்கொள்ளப்படுவதால், அதனை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று, வனவிலங்குகள் மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. யாழ்ப்பாண நகரிலிருந்து கூப்பிடு தூரத்தில், கசப்பான வரலாறுகளைச் சுமந்து நிற்கும் மண்டைதீவு, இன்று இயற்கை அன்னை வழங்கிய அரிய கொடையான உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாப்பதா அல்லது நவீன அபிவிருத்திக்குள் மூழ்குவதா என்ற தர்மசங்கடமான விவாதத்தின் மையப்புள்ளியாக மாறியுள்ளது. மண்டைதீவு என்றாலே ஒரு காலத்தில் மனிதப் புதைகுழிகளே நினைவுக்கு வந்த நிலை மாறி, இன்று அங்குள்ள அலை ஆத்திக் காடுகளும் (கண்டல் தாவரங்கள்), வலசை வரும் பறவைகளின் சங்கமமும் அந்த நிலத்துக்குப் புதியதொரு உயிர்ப்பைத் தந்துள்ளன. இத்தகைய சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதியில், சுமார் 1700 பேரை மட்டுமே சனத்தொகையாகக் கொண்ட ஒரு சிறிய தீவில், சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கான எத்தனிப்புகள், அபிவிருத்தி குறித்த பெரும் எதிர்பார்ப்புகளையும் அதேவேளை சூழலியல் குறித்த ஆழ்ந்த கவலைகளையும் ஒருசேரத் தோற்றுவித்துள்ளன.

அபிவிருத்தி என்பது ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. காணிகளின் மதிப்பு உயர்வு, சுற்றுலாப் பயணிகளின் வருகை, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு என மக்கள் மைதான வருகையைக் கொண்டாடுவது நியாயமானதே. ஆனால், 'அலை ஆத்திக் காடுகள்' என்று அழைக்கப்படும் கண்டல் தாவரங்கள், சுனாமி போன்ற பேரழிவுகளிலிருந்தே நிலத்தைப் பாதுகாத்த இயற்கை அரண்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஏழு வகையான கண்டல் தாவரங்களும், அரிய வகை மருத்துவக் குணமிக்க செடிகளும் நிறைந்த இந்தச் சூழல் தொகுதி, பல்லாயிரக்கணக்கான பறவைகளின் புகலிடமாகவும் விளங்குகிறது. முறையான சூழல் தாக்க மதிப்பீடு இன்றி, 1980ஆம் ஆண்டின் தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தை மீறி இத்தகைய கட்டுமானங்கள் முன்னெடுக்கப்படுவது, வருங்காலச் சந்ததியினருக்கும் , இயற்கைக்கும் நாம் செய்யும் துரோகமாகும்.

வனவிலங்குகள் மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது போல, முறையான அனுமதிகள் இன்றி இலங்கை கிரிக்கெட் சபை இந்தத்திட்டத்தை முன்னெடுப்பது சட்ட மீறலாகும். யாழ்ப்பாணத்தில் சர்வதேச மைதானம் அமைப்பதற்கு மண்டைதீவைத் தவிர வேறு மாற்று இடங்கள் இல்லையா என்ற கேள்வி இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. அத்தியாவசியமான குடிநீர் வசதிகூட இல்லாத ஒரு தீவில், பெருஞ் செலவில் மைதானத்தை அமைப்பதன்மூலம் அந்த நிலத்தின் நன்னீர் மட்டமும், கடற்சூழலும் எத்தகைய பாதிப்பிக்கு உள்ளாகும் என்பது ஆராயப்பட வேண்டும். சூழல் நேயமற்ற எந்தவொரு அபிவிருத்தியும் நிலைபேறான பலனைத் தராது. ஆகவே, அரசாங்கம் உணர்ச்சிகரமான அபிவிருத்தி அரசியலுக்கு அப்பால் நின்று, மண்டைதீவின் இயற்கைச் சமநிலையைப் பாதுகாக்கும்வகையில் இந்தத்திட்டத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இயற்கையை அழித்து உருவாக்கப்படும் எந்தவொரு மைதானமும், எதிர்காலத்தில் சூழலியல் பேரழிவுகளுக்கான களமாகவே அமையும் என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மைஉண்டாகப் பெறின்**

**பொருள்:** இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால், பெண்ணைவிடப் பெருமையுடையவை வேறு என்ன இருக்கின்றன?




# கல்வி மறுசீரமைப்பைக் கண்காணிக்கக் குழு!

**கொழும்பு,பெப்.23**
**கல்வி மறுசீரமைப்புச் செயற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிட ஜனாதிபதி அநுர குமாரதிஸாநாயக்க நிபுணர் குழுவொன்றை நியமிக்கவுள்ளார் என அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.**

கல்வித்துறையின் கட்டமைப்பை முழுமையாக மாற்றியமைக்கும் நோக்கில் இந்த நிபுணர் குழு கவனம் செலுத்தும்.

கல்வி மறுசீரமைப்புச் செயற்பாடுகள் வெறும் கொள்கை அளவில் மட்டும் நின்றுவிடாமல், பாடசாலை மட்டத்தில் அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை இந்தக்குழு நேரடியாகக் கண்காணிக்கும். உலகளாவிய போட்டித்தன்மைக்கு ஈடுகொடுக்கும்வகையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனைகளை மையமாகக் கொண்ட புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்த ஆலோசனைகளை வழங்கும். அண்மையில் தரம் 6 பாடப் புத்தக வரைபட விவகாரத்தில் அம்பலமான பாரிய நிர்வாகத் தவறுகள் மற்றும் குளறுபடிகள் இனி வரும் காலங்களில் நிகழாமல் இருப்பதை இந்தக் குழு உறுதி செய்யும். இந்த நிபுணர் குழுவில் கல்வியியலாளர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் எனப் பல்துறையைச் சார்ந்த நிபுணர்கள் உள்வாங்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




# மாத்தறையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு,பெப்.23
மாத்தறை, கந்தரே பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஒரு வர்த்தகர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், வீதியில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)




# ரயிலுடன் விபத்து இருவர் உயிரிழப்பு

கொழும்பு,பெப்.23
காலியிலிருந்து மருதானை நோக்கிச் சென்ற விரைவு ரயிலுடன் மோதிய கப் வாகனத்தில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் மூவர் பலத்த காயமடைந்தநிலையில் களுத்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில் 22 மற்றும் 28 வயதுடைய இரண்டு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# நிலச்சரிவு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு,பெப்.23
தொடர் மழையினால் நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி கண்டி, கேகாலை, மாத்தளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே நிலச்சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# ஐஸ்போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது

கொழும்பு,பெப்.23
கல்கிஸ்ஸ, வில்லியம் பிளேஸ் பகுதியில் 110 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் இரத்மலானைப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடையவராவார். சம்பவம் தொடர்பில் கல்கிஸ்ஸப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - மாசி 12
23.02.2026
சுபநேரம் : 3.30 - 5.00
ராகுகாலம் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி விமானநிலையத்தில் இளையோருக்கு காட்சிக்கூடம்

## உயர்மட்டக் கலந்துரையாடலில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், பெப்.23**

**வடக்கு மாகாணத்தில் கிராமப்புறங்களிலுள்ள இளையோரிடத்தில், சிவில் விமானப் போக்குவரத்துத்துறை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்நோக்குடன், பலாலி விமானநிலையத்தில் விசேட காட்சிக்கூடமொன்றை நிறுவுவதற்கு, உயர்மட்டக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் துறைமுகங்கள், சிவில் விமானப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் பொறியியலாளர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு ஆகியோரின் தலைமையில், சிவில் விமானப் போக்குவரத்துத் துறை தொடர்பில், வடக்கு மாகாண இளையோருக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டத்தை மீள ஆரம்பிக்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு, ஆளுநர் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் வரவேற்புரையாற்றிய ஆளுநர், வடக்குக்கு இது மிகவும் அவசியமானதொரு செயற்றிட்டம். இத்துறை சார்ந்த கல்வி மற்றும் வேலைவாய்ப்புள் தொடர்பில் இளையோருக்குப் பரந்துபட்ட விழிப்புணர்வை வழங்குவதற்கு, மாகாண நிர்வாகத்தின் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும். பலாலி விமான நிலைய விரிவாக்கம் மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி என்பன வடக்கு மக்களின் மிகப்பெரிய எதிர்பார்ப்பு-என்றார்.

தொடக்கவுரையாற்றிய அமைச்சர் அநுர கருணாதிலக, சிவில் விமானப் போக்குவரத்துத்துறையில் இலங்கைக்குத் தனித்துவமான இடமுண்டு, இதனுடான வேலை வாய்ப்புகளும் தாராளம். வடக்கின் மூலைமுடுக்குகளிலெல்லாம் இத்தகவல் இளையோரைச் சென்றடையவேண்டும். பாரம்பரிய வேலைவாய்ப்புகளைத் தாண்டி, இத்துறை சார்ந்த வாய்ப்புகள் தொடர்பில் அறிவூட்டப்படவேண்டும். பலாலி விமானநிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், இந்திய அரசாங்கத்தின் 63.5 மில்லியன் டொலர் நிதியுதவியில் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்-என்றார்.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் கெப்டன் தமிந்த ரம்புக்வெல்ல தெரிவிக்கையில், அரசாங்கத்தின் தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாகவே, இச்செயற்றிட்டம் வடக்கு மாகாணத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் உள்ளூர் விமான சேவைகளுக்கான முனையம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது-என்றார். (க-113)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நிராகரிக்கப்படவேண்டும்

## கரைச்சிப் பிரதேசசபையில் தீர்மானம்

கிளிநொச்சி, பெப்.23

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதாக உறுதியளித்து ஆட்சிக்குவந்த ஜனாதிபதி, தற்போது அதற்குப் பதிலாக புதியதொரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவருவது தமிழ்மக்களை மீண்டும் அடிமைப்படுத்தும் செயல். அதை முற்றாக நிராகரிக்க வேண்டும் எனத் தெரிவித்து கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட் டுள்ளது.

கரைச்சிப் பிரதேசசபையின் தவிசாளர் அருணாசலம் வேலமாலிகிதன் தலைமையில் சபையின் மாதாந்த அமர்வு அண்மையில் இடம்பெற்றது. அதில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் நீண்ட விவாதம் நடைபெற்றது. 1979ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலுள்ள இந்தச் சட்டம் சிறுபான்மைத்தமிழ்மக்களை ஒடுக்குவதற்கே பயன்படுத்தப்பட்டுகின்றது. இந்தச் சட்டம் பல்வேறு வகையில் தமிழ்மக்களை அடிமைப் படுத்தி ஆட்கொண்டு வருகின்றது என்று சபையில் சுட்டிக்காட்டப் பட்டது. அரசாங்கம் தற்போது அறிமுகப்படுத்தியுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவானது தமிழ் மக்களுக்குப் பயன்தராது என்பதால், அதை முற்றாக நிராகரிக்கவேண் டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. சபையில் கலந்து கொண்ட 37 உறுப்பினர் களில் 36 பேர் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாகவாக் களித்தனர். (ச-113)

# மனைவி கொலை; கணவன் சரண்!

காலி ஹக்பிட்டிய பகுதியில் கணவர் ஒருவர் தனது மனைவியின் கழுத்தை அறுத்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் 32 வயதுடைய மூன்று குழந்தைகளின் தாய் எனத் தெரிய வந்துள்ளது. கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். (ச-இ)


# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்




## திரு. அருளானந்தம் சாந்தகுமார் (SLPS -I, BEd)




**சேவைக் காலம்**

- யா / மெய்கண்டான் G.T.M.Vid - 27.11.1989 - 01.02.1993
- யா / கோப்பாய் ஆசிரியர் கலாசாலை - 02.02.1993 - 03.12.1994
- யா / நாரந்தனை கணேசா வித்தியாலயம் - 01.01.1995 - 31.08.1995
- யா / தம்பாட்டி A.M.T.M.S - 01.09.1995 - 12.05.1996
- யா / அனிஞ்சியன் குளம் கலவன் பாடசாலை - 13.05.1996 - 02.06.1999
- மன்னார்/ கௌரி அம்மன் கனிஸ்ர வித்தியாலயம் - 03.06.1999 - 03.06.2002
- யா / பாலாவோடை G.T.MS காரைநகர் - 04.06.2002 - 29.04.2014
- யா / சுந்தமூர்த்தி நாயனார் வித்தியாலயம் காரைநகர் - 30.04.2014 - 22.02.2026

எமது பாடசாலையின் அதிபர் திரு.அருளானந்தம் சாந்தகுமார் அவர்கள் 22.02.2026 நேற்றுடன் 37 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ளார் இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்தி நிற்கும்

**யா/ சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்.**
**ஆசிரியர்கள், மாணவர்கள்.**

(cs.60820) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாய் வெள்ளப்பிரச்சினை நிரந்தரத் தீர்வுக்கு விசேட திட்டம்!

## ஆளுநர் நடவடிக்கை

**கொழும்பு, பெப்.23**

**யாழ். கல்லுண்டாய் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் ஒவ்வொரு மழைக் காலத்திலும் வெள்ளப்பெருக்கினால் இடம்பெயரும் நீண்டகாலத் துயரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் விசேட திட்டமொன்று தயாரிக்கப்பட்டுவருகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது அருகிலுள்ள கொத்துக் கட்டிக்குளத்தைத் தூர்வாரி, அங்கிருந்து பெறப்படும் மண்ணைப் பயன்படுத்தி கல்லுண்டாய் குடியேற்றப் பகுதியில் நிலம் நிரவுதல், குடியேற்றத் திட்டத்துக்கு அண்மையாகச் செல்லும் வாய்க்காலைத் தூர்வாருதல் குறித்து ஆராயப்பட்டது. அத்துடன் கொத்துக்கட்டிக்குளத்தைத் தூர்வாரியதன் பின்னர், எதிர்காலத்தில் அதன் பராமரிப்புப் பணிகளை வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையிடம் கையளிப்பது தொடர்பான யோசனையும் முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை மற்றும் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் என்பன ஒன்றிணைந்து ஆராய்ந்து, அதற்கான துரித திட்ட மதிப்பீட்டு முன்மொழிவை விரைவில் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (ச-27,66)

# 11 இலட்சம் தண்டப்பணம் 5 இலட்சமாகக் குறைப்பு

## மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினர்கள் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23

அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டுமானத்துக்கான தண்டப்பணம் சபையின் அனுமதியின்றித் தன்னிச்சையாகக் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து மானிப்பாய் பிரதேச சபை அமர்வில் அமளிதுமளி ஏற்பட்டது.

நவாலிப் பகுதியில் தனியார் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்ட சூரிய மின்னுற்பத்தித் திட்டம், பிரதேச சபையின் அனுமதியின்றிச் செயற்படுத்தப்பட்டு வந்தது.

குறித்த உரிமையாளர் வங்கித் தேவைக்காகப் பிரதேசசபையின் அனுமதியை நாடியபோது, சட்டவிரோதக் கட்டுமானத்துக்காக 11 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை தண்டப்பணமாக அறவிடப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கூட்டத்தில் எவ்வித முறையான காரணங்களுமின்றி அந்தத் தொகை 5 இலட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இறுதியாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில், தண்டப்பணத்தைக் குறைப்பதற்கான எந்தவொரு நியாயமான காரணமும் குறிப்பிடப்படவில்லை.

தண்டப்பணம் குறைக்கப்பட்டதன் பின்னணியில் யாராவது கையூட்டுப் பெற்றிருக்கலாம் என உறுப்பினர்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

அதன்படி இந்தப் பகிரங்கச்சபையில் இதுகுறித்துப் பேசாமல் குழுநிலைக் கலந்துரையாடலில் விரிவாக ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதென அமர்வில் தீர்மானிக்கப் பட்டது. (ச-27)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு நாம் எதிர்ப்பில்லை

## தேசிய மக்கள் சக்தி விளக்கம்

யாழ்ப்பாணம், பெப்.23

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்குத் தேசிய மக்கள் சக்தி எதிரானவர்கள் அல்லர். நல்லூர்ப் பிரதேச சபையில் அடிப்படைப் புரிதல் இன்றி கொண்டுவரப்பட்ட பிரேரணையையே தாம் எதிர்த்தோம் என்று அந்தக் கட்சித் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி நல்லூர்ப் பிரதேச சபையில் இடம்பெற்ற அமர்வில் இடம்பெற்றமை குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகளுக்குத் தெளிவுபடுத்தல் வழங்கும்வகையில் அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர். 1979இல் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக உள்ளது. இதற்காக நாம் நீண்டகாலமாகப் போராடி வருகிறோம். தற்போதைய அரசாங்கம் நிச்சயம் இந்தச் சட்டத்தை நீக்கும். அதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. நல்லூர்ப் பிரதேசசபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை எதிர்த்தமையானது நிகழ்ச்சிநிரலில் இல்லாத ஒரு விடயத்தைத் தவிசாளர் திடீரெனச் சபையில் புகுத்தியமை ஒரு அரசியல் நாடகமே.

அரசாங்கம் முன்மொழிந்துள்ள புதிய சட்டவரைபு குறித்து எவ்வித வாசிப்போ அல்லது அடிப்படை அறிவோ இன்றி தவிசாளர் இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ளார்.

புதிய சட்டம் குறித்துக் கருத்துகளைத் தெரிவிக்க அவகாசம் இருந்தும், அதனைச் செய்யாது சபையில் அரசியல் இலாபம் தேட முயன்றதாலேயே அந்தப் பிரேரணையை நாம் எதிர்த்தோம்.

தேசிய மக்கள் சக்தி 'பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கத்துக்கு எதிர்ப்பு' எனச் செய்திகளைத் திரிபுபடுத்தி வெளியிட்ட சில ஊடகங்களின் செயலைக் கண்டிக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-26)

# குற்றச்செயலைப் புரிந்துவிட்டு நியாயம் கேட்பது தார்மீகமல்ல!

## வடக்கு கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் தெரிவிப்பு

மன்னார்,பெப்.23

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தொழில் செய்வது ஒரு வெளிப்படையான குற்றச்செயல். அத்தகைய செயலில் ஈடுபட்டுவிட்டு நியாயம் கேட்டுப் போராடுவது எவ்விதத்திலும் நியாயமற்றது என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழைந்தால் கடற்படை கைதுசெய்யும் என்று தெரிந்தே தமிழக மீனவர்கள் இந்தக் குற்றச் செயலைச் செய்கின்றனர். ஒரு நாட்டின் கடல் எல்லை என்பது அந்த நாட்டின் இறையாண்மைக்கு உட்பட்டது. அதனை மீறுவதுடன், இங்குள்ள தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிப்பதையும் கடல் வளங்களைச் சூறையாடுவதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். குற்றத்தைச் செய்துவிட்டு, கைதுசெய்யப்பட்ட படகுகளை விடுவிக்கக்கோரி உண்ணாவிரதம் இருப்பதோ அல்லது போராடுவதோ தார்மீக ரீதியாகத் தவறானது.

இந்திய மீனவர்கள் அத்துமீறுவதைத் தமிழக அரசும், இந்திய மத்திய அரசும் உடனடியாகத் தடுக்கவேண்டும் - என்றார். (ச-இ)





# அபிவிருத்திக் கோரிக்கைகளை இந்தியா நிறைவேற்றத் தயார்

## இந்தியப் பிரதித் தூதுவர் உறுதி

யாழ்ப்பாணம்,பெப்.23

இலங்கை அரசாங்கம் விடுக்கும் கோரிக்கைகளுக்குச் சாதகமான பதிலை வழங்குவதற்கு, இந்திய அரசாங்கம் தயாராகவுள்ளது என்று இலங்கைக்கான இந்தியத்தூதரகத்தின் பிரதித்தூதுவர் சத்யஞ்சல் பாண்டே தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சத்யஞ்சல் பாண்டே மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத்தூதுவர் ஜெனரல் சாய்முரளி ஆகியோர், வடக்கு மாகாண ஆளுநரை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தனர். சந்திப்பில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன், வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர். குறிப்பாக, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளின் அபிவிருத்தி மற்றும் காரைநகர் படகுத் தள அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர். அதேவேளை இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் காங்கேசன்துறைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை தொடர்பில் நினைவுகூர்ந்த ஆளுநர், பலாலி விமானநிலையத்தின் முனையத்தை அபிவிருத்தி செய்தல், வடக்கு மாகாணத்தில் இந்திய முதலீட்டாளர்களை முதலீடு செய்வதற்கு ஊக்குவித்தல் தொடர்பாகக் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதித்தூதுவர், முதலீட்டு வலயங்கள் தொடர்பான கொள்கை நிலைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட பின்னர், இந்திய முதலீட்டாளர்களை நிச்சயம் வடக்கில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்க முடியும் என்று உறுதியளித்தார். (க-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# உவர் தடுப்பணைகள் புனரமைப்பு 187 மில்லியன் ரூபா நிதி தேவை

கிளிநொச்சி,பெப்.23

**கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் வீசிய 'டித்வா' புயல் மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக சேதமடைந்ம கடற்கரையோர உவர் நீர் தடுப்பணைகளை மீளமைக்க 187 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

விவசாய நிலங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு காரணமாக கடல் நீர் உட்புகுதல் மற்றும் வெள்ளத்தினால் விவசாய வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 2,000 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களுக்குள் கடல் நீர் புகுந்துள்ளதால் பயிர்ச் செய்கை அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பிரதான வீதிகள், பாலங்கள் மற்றும் விவசாய உட்கட்டமைப்பு வசதிகள் புயல் சீற்றத்தினால் நிலைகுலைந்துள்ளன.

பூநகரி கமநலசேவை நிலையத்தின்கீழ் உள்ள கடற்கரையோரக் கிராமங்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசங்களில் உடைப்பெடுத்துள்ள இந்த உவர்நீர் தடுப்பணைகளை துரிதமாக புனரமைப்பதன்மூலமே எதிர்கால சிறுபோக மற்றும் பெரும்போகச் செய்கைகளைப் பாதுகாக்கமுடியும். இதற்காக 187 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது.

மழைக்காலம் முடிவதற்குள் தற்காலிகமாகவேனும் அணைக் கட்டுகளை சீர்செய்யப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# சுந்தரபுரம் வீதியின் புனரமைப்பு ஆரம்பம்

வவுனியா,பெப்.23

வவுனியாப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சுந்தரபுரம் பிரதான வீதியின், புனரமைப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும், பிரதியமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபைத் தவிசாளர் பா.பாலேந்திரன் ஆகியோரால் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

சுந்தரபுரம் பிரதான வீதியின் 2.5 கிலோமீற்றர் தூரத்துக்கு காப்பெற் இடப்படவுள்ளது. அதேவேளை வவுனியா லைக்கா கிராமத்தில் ஒரு கிலோமீற்றர் வீதியும், மன்னங்கேணி கிராமத்தில் ஒரு கிலோமீற்றர் வீதியும் மற்றும் கல்குவாரியில் 1.65 கிலோ மீற்றர் வீதியும் இந்தத் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படவுள்ளன. இந்த வீதிகளைப் புனரமைக்க 162 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க-110)

# குழந்தைக்கு தீக்காயங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.23

நெருப்புத் தணலுடன் உயரத்தில் வைக்கப்பட்டிருந்த சாம்பிராணித் தட்டை எடுக்க முயன்ற, ஒரு வயதுக்குழந்தை தீக்காயங்களடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மிருசுவில் பகுதியில் இடம்பெற்றது. (க-131)







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாள் அமர்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. (க-66)

# பிரதேச அபிவிருத்தி வங்கியால் கிளிநொச்சியில் குருதித்தானம்

கிளிநொச்சி,பெப்.23

பிரதேச அபிவிருத்தி வங்கியின், வடமாகாண ஊழியர் நலன் புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் குருதித்தான முகாம் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

பிரதேச அபிவிருத்தி வங்கியில் ஊழியர்களாகக் கடமையாற்றிய தெய்வேந்திரன் பகீசன் மற்றும் தனிக்க சஞ்சீவ சுமணதாசப் பயிற்சி நெறியொன்றுக்காக, அநுராதபுரத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோது, வவுனியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தனர். இவர்களின் நினைவாக இந்தக் குருதித்தான முகாம் ஏற்பாடுசெய்யப்பட்டது. (க-55)





# பளை குருடிகாடு இந்து மயானத்தில் இளைப்பாறு மண்டபம் அமைக்குக

## மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.23

பளை, வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள குருடிகாடு இந்துமயானத்தில் மக்கள் பயன்பாட்டுக்காக இளைப்பாறு மண்டபம் ஒன்றை அமைத்துத்தருமாறு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தப் பகுதியில் காணப்பட்ட வெடிபொருள்கள் காரணமாக மயானம் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாமலிருந்தது.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு வெடிபொருள்கள் அகற்றப்பட்டு கடந்த 2023ஆம் ஆண்டு முதலே பொதுமக்கள் இந்த மயானத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையினால் மயானத்தில் எரிகொட்டகை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது. மயானத்தில் இளைப்பாறு மண்டபம் இல்லாத காரணத்தால், அந்தியட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளும் மக்கள் மழை மற்றும் வெயில் காலங்களில் ஒதுங்குவதற்கு இடமின்றி மரநிழல்களைத் தேடி அலையும் துர்ப்பாக்கிய நிலை தொடர்கிறது.

எனவே மக்களின் நலன்கருதி பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை அங்கு இளைப்பாறு மண்டபத்தை அமைத்துத்தரவேண்டும் என்று பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ச-9)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வேலணைப் பிரதேச செயலகம் இணைந்து நடத்திய மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களின் ஆக்கத்திறன் பொருள்கள் காட்சிப்படுத்தல் அண்மையில் வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 03 . 1954



இறப்பு 22 . 02 . 2026

## ரதி சந்திரநாதன்

(ஓய்வுபெற்ற உபஅதிபர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி)

முதலி கோவில் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ரதி சந்திரநாதன் அவர்கள் நேற்று (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் பூமணி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், சந்திரநாதன் (இளைப்பாறிய நில அளவை உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தா (கனடா), மாலதி (கொழும்பு), ஸ்ரீதரன் (லண்டன்), கௌரி (லண்டன்), செல்வக்குமார் (கனடா), ரேவதி (கனடா), ஜெயந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மதுசன் (ஹோட்டல் முகாமையாளர்- யாழ்ப்பாணம்), துவாரகன் (நில அளவைப்புல உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களம் - திருநெல்வேலி), கோபிகன் (வங்கி உத்தியோகத்தர், சம்பத் வங்கி - சங்கானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீர்த்திகா (MK Surprise Delivery), பானுஜா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - நல்லூர்), ஸிந்துஜா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - கோப்பாய்) ஆகியோரின் மாமியாரும், கர்னிஷ் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), லவனிஷ் (யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ஆராதனா, மாதுமை ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2026) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முதலி கோவில் வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**கணவர் - சந்திரநாதன்**
**மகன்கள்- மதுசன், துவாரகன், கோபிகன்.**

(CS 60827) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 09 . 1953



மறைவு 22 . 02 . 2026

## கிறிஸ்ஸோலோகஸ் மனோகரன்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ஸோலோகஸ் மனோகரன் நேற்று (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ஸோலோகஸ் - பொன்மலர் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செபமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், அருந்தவராணியின் அன்புக் கணவரும், யோய்தா ருக்ஷன், ஏஞ்சல் ருஷிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிவேதிகா, சஜீவன் ஆகியோரின் மாமனாரும், லியா, லிதியா, சஞ்ஜித் சஞ்சனா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான வினோதானந்தன், நியூட்டன் மற்றும் நவீனன், ஜஸ்மின் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக் ஆராதனை இன்று (23.02.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொழும்புத்துறையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக St.Johns ஆலய சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 222 1242**

(cs.60826) N-1

# மரண அறிவித்தல்

## திரவியம் நல்லையா



உடுவில் தெற்கை பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் நல்லையா அவர்கள் நேற்று (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் தவராசா, கந்தசாமி, சிவராசா, குணராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசுப்பிரமணியம், சிவகாமசுந்தரி, கமலாசனி, இந்திராணி, கிருஷ்ணமலர், இரத்தினம், அரியநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் தர்மேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயகுமாரி, திருமகள் ஆகியோரின் அன்பு மாமியாரும், உதயேஸ்வரன், உதயதர்சினி, சர்மிளா, குணசீலன், சதீஸ்வரன், தனேஸ்வரன், குனேஸ்வரன், தரனேஸ்வரன், தர்மி, கண்ணா, கிருஷ்ணா, நல்லையா, ஏஞ்சல், ஆர்த்தி, மோனா, ரினா ஆர்த்தி, சுஜீவன் ஆகியோரின் அன்பு (அப்பம்மாவும்). பேர்த்தியும், உதிஸா, லவண், ஜொகைசா, சகைனா, அச்சுதன், யாதனா, சரினா, அயிசியா, சேத், எலைஜா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.30 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம்** 27.05.1935 **மறைவு** 22.02.2026

**ஈஞ்சடி வைரவர் கோவிலடி,**
**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**021 225 5372**

cs 60828) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானைத் தாக்க இஸ்ரேல் தயார்!

## பிரதமர் நேதன்யாகு அறிவிப்பு

**டெல்அவிவ், பெப். 23**

**ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இஸ்ரேல் தயாராகிவரு கின்றது என, இஸ்ரேலிய பிரதமர் நேதன்யாகு வெளிப்படையாகக் கூறியுள்ளார்.**

அணுசக்தி விவகாரத்தில் அமெரிக்காவு டன் இணைந்து ஈரான்மீது நேரடித் தாக் குதல் நடத்துவதற்கு இஸ்ரேல் தயா ராகிவருகின்றது எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இவ்வாறான நிலையிலேயே, அந்தத் தகவல்களை பிரதமர் நேதன்யாகு வெளிப் படையாக உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-அணு சக்தி விவகாரத்தில் ஈரான் ஏதேனும் தவறு செய்தால், ஈரானியர்கள் கற்ப னையிலும் பார்த்திராத அளவுக்குக் கொடூரமான தாக்குதல்களை முன்னெ டுப்போம். ஈரானுக்கு வழங்கப்பட்ட அவ காசமும், எச்சரிக்கைக் காலமும் நிறை வடைந்துள்ளன. இனி தண்டனை வழங்கவேண்டிய நேரம்- என்றார்.

இஸ்ரேலியப் பிரதமர் நேதன்யாகுவின் உரையைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்துள்ளது. ஈரான் தாக் கப்படும் பட்சத்தில், இஸ்ரேல் மீது பல்லா யிரம் ஏவுகணைகளை ஒரேதருணத்தில் ஏவுவதே ஈரானின் பிரதான திட்டமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஆப்கானில் நிலநடுக்கம்

காபூல், பெப். 23

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் நேற்று நிலநடுக்கம் ஏற் பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.8 அலகு களாகப் பதிவானது. நிலநடுக்கத் தால் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பில் தகவல்கள் வெளியா கவில்லை. எனினும், உயிரிழப்பு கள் எவையும் பதிவாகவில்லை என உறுதிப்படுத்தப்படாத தகவல் கள் வெளியாகியுள்ளன. (ம)

**வேலைக்கு பெண் ஊழியர் தேவை**

யாழ் நகரில் இயங்கும் தனியார் நோயாளர் பராமரிப்பு நிறுவனத்திற்கு அலுவலக உத்தியோகத்தராக பெண் ஊழியர் தேவை. யாழ்.நகரை அண்மித்த பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 074 0351**

(CS 31337)A




# 200 தொகுதி நிச்சயம் அதற்குமேல் இலட்சியம்

## ஸ்டாலின் நம்பிக்கை

சென்னை, பெப். 23

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் இருநா றுக்கு மேற்பட்ட தொகுதிகளைக் கைப்பற் றுவது நிச்சயம் என்று முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டங்களாக தி.மு.க தேர்தல் மாநாடுகளை நடத்தி வரு கின்றது. மதுரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றி னார். அவர் மேலும் தெரிவித்ததாவது: தி.மு.க.வின் தேர்தல் கூட்டணி ஒவ்வொரு வாரமும் பலப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன், வாராவாரம் இடம்பெறும் பல் வேறு மாநாடுகளில் மக்கள் திரளாகக் கலந்து கொள்கின்றனர். இதைப் பார்க் கும்போது 'இனி எப்போதும் நாம்தான்' என்ற நம்பிக்கை பிறக்கின்றது. மக்க ளால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட இயக்கம்தான் தி.மு.க. இது வெறும் அரசியற் கட்சியல்ல. மாறாக, கற்ப னைக்கும் அப்பாற்பட்ட பாரிய சக்தி. இதன் வேர்கள் ஆழமானவை. எனவே, தி.மு.க.வை வீழ்த்துவது தென்பது நடக்காத காரியம் என்றார். (ம)

# தமிழ்நாட்டில் பா.ஜ.க. வாலாட்டவே முடியாது

## திருமா சவால்

சென்னை, பெப். 23

பா.ஜ.க.வால் வாலாட்ட முடியாத ஒரேயொரு மாநிலம் என்றால், அது தமிழகம்தான் என விடுதலைச் சிறுத் தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுக்கூட்டம் விழுப்புரத்தில் நேற் றுமுன்தினம் நடைபெற்றது. அந்தக் கட்சியின் தலைவர் திருமாவளவன் இதில் கலந்துகொண்டு உரையாற் றினார். இதன்போதே, தமிழகத்தில் மட்டுமே பா.ஜ.க.வால் இதுவரை ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. இனியும் இந்த வரலாறு தக்கவைக் கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- தமிழக வெற்றிக்கழகத்தில் இருந் தும், அ.தி.மு.க.விடம் இருந்தும் கூட்டணிக்கான அழைப்பு எமக்கு வந்தது. ஆனால், அந்தக் கட்சிகளு டன் கூட்டணிக்கு இடமில்லை என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளோம். தமிழகத்தில் வலதுசாரிகள் ஆதிக் கம் செலுத்தக்கூடாது என்பதற்கா கவே இந்த முடிவை எடுத்தோம். மதங்களை அடிப்படையாக வைத்து பா.ஜ.க மக்களைப் பிரித்தாள் கின்றது. இதற்கு இடம்கொடுக்கக்கூ டாது. விஜயகாந்தால் உருவாக்கப் பட்ட 'தேசிய முற்போக்குத் திராவிட கழகம்', முதல்வர் ஸ்டாலின் தலை மையிலான கூட்டணியில் இணைந் தமை முக்கியத்துவம் மிக்க விடயம் என்றார். (ம)

# ட்ரம்பின் உலகளாவிய வரி மேலும் எகிறியது!

வொஷிங்டன், பெப். 23

உலக நாடுகளுக்கான வரியை 15 வீதமாக அதிகரிப்பதாக, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதிபர் ட்ரம்பின் வரி விதிப்பு சட்டவி ரோதமானது என, இரு தினங்க ளுக்கு முன்னர் அமெரிக்க உச்ச நீதிமன்றம் அறிவித்திருந்தது. அந் தத் தீர்ப்பை ஏற்க மறுத்துள்ள ட்ரம்ப், 'உலகளாவிய வரிகள்' என்ற பெயரில் உலக நாடுகளுக்கு புதிய வரிகளை அறிவித்துள்ளார். நேற்று முன்தினம் 10 வீதமாக அறிவிக்கப் பட்ட இந்த வரிகள், நேற்று 15 வீத மாக உயர்த்தப்பட்டன. (ம)

**மரண அறிவித்தல்**

**பூபாலசிங்கம் நகுலேஸ்வரன்**



பிறப்பு:19.10.1986 இறப்பு:22.02.2026

சாரதா வீதி, சங்கத்தானையை பிறப்பிடமாக வும் வதிவிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் நகுலேஸ்வரன் அகால மரணம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி பூபால சிங்கம் மற்றும் பூபாலசிங்கம் பரிமளம் ஆகியோரின் அன்பு மகனும், புஸ்பலதா, புவனேஸ்வரி, கோகுலகிருஷ்ணன், பிறேம தர்ஷினி ஆகியோரின் ஆசை சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CR 47104)A

**நீங்காத நினைவலைகள்**

அன்னை மடியில் 10.11.1924



இறைவன் அடியில் 27.12.1999

அன்னை மடியில் 10.08.1924



இறைவன் அடியில் 26.02.2023

அமரர் **ந. வாதவூரர்** (ஓய்வு பெற்ற ஆசிரியர்) 26 வருடங்கள்

அமரர் **நவமணி வாதவூரர்** (ஓய்வு பெற்ற ஆசிரியர்) 03 வருடங்கள்

அப்பா, அம்மா நீங்கள் எம்மை விட்டு பிரிந்து இறைவனடி சேர்ந்து எத்தனை வருடங்கள் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்மை விட்டு அகலாது நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள்.

மாவிலங்கை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

தொ.பேசி.:
வா. கலாதரன் - 071 856 1625 வா.தயாபரன் - 077 691 5296
Dr.(திருமதி) ச.கிருஸ்ணராசா - 077 907 0001 வா.லோகாதரன் - 077 967 3636

(69825) (N-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## குடும்பஸ்தர்...

டைய குடும்பஸ்தர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சடலம் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், இன்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழப்புத் தொடர்பில் சந்தேகங்கள் வெளியிடப்படும் நிலையில், ஈச்சங்குளம் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-110)

## பழைய...

புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் தொடர்பாக ஊடகங்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தேசிய மக்கள் சக்தியால் வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிக்கு அமைய புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகள் நிச்சயம் முன்னெடுக்கப்படும். புதிய அரசியலமைப்புக்காக நாம் மீண்டும் ஆரம்பத்தில் இருந்து பணிகளைத் தொடங்க வேண்டியதில்லை.

கடந்த காலங்களில் பல்வேறு தரப்புகளால் தயாரிக்கப்பட்ட பல வரைவுகள் மற்றும் ஆவணங்கள் கைவசம் உள்ளன. அவற்றைப் பரிசீலித்து, சிறந்த அம்சங்களை உள்வாங்கி இந்தப் பணிகளைத் தொடரமுடியும். அதேவேளை, புதிய அரசியலமைப்பு உருவாக்க நடவடிக்கைக்கான துல்லியமான காலவரையறையைத் தற்போது கூறமுடியாது - என்றார். (அ-எ-இ)

## புதிய...

தாவது:-

பிரதம நீதியரசர் ப்ரீதி பத்மன் சூரசேனவின் தலைமையில், நீதிமன்ற செயற்பாடுகள் அனைத்தும் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. புதிய நீதிமன்றங்களின் செயற்பாடுகளை ஆரம்பிக்கத் தேவையான உட்கட்டமைப்பு மற்றும் ஆளணி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய நீதிமன்றங்களில், பெரும்பாலானவை குற்றவியல் மற்றும் ஊழல் வழக்குகளை விசாரணை செய்யவுள்ளன. சிவில் மேல்முறையீட்டு வழக்குகளையும், வணிக வழக்குகளை விசாரணை செய்வதற்கு, தலா இரு நீதிமன்றங்கள் உருவாக்கப்படவுள்ளன.

கொழும்பு புதுக்கடையிலுள்ள 'அதிகரண பியச' கட்டடத்தில் 5 நீதிமன்றங்களும், கொழும்பு 07, பௌத்தலோக மாவத்தையில் உள்ள இரண்டு முன்னாள் அமைச்சர்களின் இல்லங்களில் இரண்டு நீதிமன்றங்களும் அமைக்கப்படவுள்ளன - என்றார். (அ-எ-இ)

## சமச்சீரற்ற...

என்று கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவுக்கு, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் தொடர்ச்சியாக காணப்படும் கர்நாடக சங்கீத ஆசிரியர் பற்றாக்குறைக்கும் வடமாகாணம் முழுவதும் காணப்படும் இந்து நாகரீக ஆசிரியர் பற்றாக்குறைக்கும் போதுமான ஆசிரியர் வளத்தை வழங்குவதற்கான பொருத்தமான மற்றும் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி பிரதமருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் எழுதியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (அ-எ-இ)

## பாடசாலைகளில்...

ஊடக அறிக்கைகளுக்கு அப்பால், நிதி வசூலிப்பதைத் தடை செய்யும் முறையான சுற்றறிக்கையைக் கல்வி அமைச்சு உடனடியாக வெளியிட வேண்டும் என்றும் அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள 5/2015 சுற்றறிக்கையின்படி வருடாந்த பராமரிப்புச் செலவுகள் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரிக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றது என்றும், அதை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்றும் அந்தக் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

வகுப்பறை ரீதியான பெற்றோர் குழுக்கள் மூலம் திருத்த வேலைகள், வர்ணம் பூசுதல் போன்றவற்றுக்காக நிதி வசூலிக்கப்படும் "புதிய முறை" ஒன்று உருவாகியுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள அந்தச் சங்கம், பல முன்னணி பாடசாலைகளில் பெருமளவிலான நிதி வங்கிகளில் நிலையான வைப்புக்களாக வைக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றை மாணவர் நலன்களுக்காகப் பயன்படுத்தாமல், மீண்டும் பெற்றோரிடம் பணம் கோருவது நியாயமற்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

2026 ஆம் ஆண்டில் பல பாடசாலைகளில் இவ்வாறான சட்டவிரோத வசூலிப்புகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன. கல்வி அமைச்சு உடனடியாக தலையிட்டு புதிய வழிகாட்டல்களை வழங்க வேண்டும் என்றும் அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ-எ-இ)

## கிருமித்...

உயிரிழந்தவராவார். நீரிழிவால் பாதிக்கப்பட்டிருந்த இவர், அதற்குரிய சிகிச்சை பெறாதிருந்த நிலையில் கிருமித்தொற்றுக்கு இலக்காகியுள்ளார்.

கடந்த 20ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## மக்களின்...

நாளைமறுதினம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாளைமறுதினம் முதல் எதிர்வரும் 18ஆம் திகதிவரை வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் பொது மக்களின் கருத்துக்களை நாட்டின் 9 மாகாணங்களை உள்ளடக்கிப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கு 13.56 சதவீத மின்சாரக் கட்டண அதிகரிப்பு யோசனையைக் கடந்த 13ஆம் திகதி இலங்கை மின்சாரசபை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தது. அதேவேளை, இந்த ஆண்டின் முதலாம் காலாண்டுக்காக இலங்கை மின்சார சபை 11.57 சதவீத மின்சாரக் கட்டண முன்மொழிவைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைத்திருந்த போதும், அதற்குப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை. (அ-எ-இ)

## இன அழிப்பு...

வது பேராளர் மாநாடு, யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அரசாங்கம் கொண்டுவர விரும்பும் புதிய அரசியலமைப்பானது, சமஷ்டி அரசியல் முறையை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் எனவும் பேராளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பழைய தேர்தல் முறைப்படி மாகாண சபை தேர்தலை நடத்தி, மாகாண அதிகாரத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

40 வருடங்களுக்கு முன்னர் தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம், தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை நசுக்குவதற்காகவே கொண்டுவரப்பட்டது என்று சுட்டிக்காட்டப்பட்டதுடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பேராளர் மாநாட்டில் ஜனநாயகத் தமிழ்தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்கள் கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-எ-இ)

## மழைக்...

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுப் பிற்பகல் விடுத்திருந்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அடிக்கடி மழை பெய்யக்கூடும். களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் காலை வேளையில் மழை பெய்யக்கூடும்.

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய விபத்துக்களைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ-எ-இ)

## 3,900...

படுத்தி 3 இலட்சம் வீட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 3 ஆயிரத்து 900 மற்றும் 3 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய மேலும் இரு கப்பல்கள் எதிர்வரும் 24 மற்றும் 28ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையவுள்ளன.

நாட்டின் பல பகுதிகளில் நேற்றும் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு நிலவியது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. சில இடங்களில் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் வரிசைகளில் காத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமை தொடர்பாக லிட்ரோ நிறுவனம், போதுமான கையிருப்பை பேணுவதற்காக புதிய கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், பெப்ரவரி மாத இறுதிக்குள் மூன்று எரிவாயு கப்பல்கள் வரவுள்ளன என்றும் தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## துப்பாக்கிச்...

மனித உரிமைகள் ஆர்வலர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில், உயிரிழந்த சிறுவனின் உறவினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்க உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியில் கடந்த 10ஆம் திகதி அதிகாலை பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஹையஸ் வாகனத்தில் பயணித்த 17 வயதுச் சிறுவன் தலையில் குண்டடிபட்டு உயிரிழந்தார். சமிக்ஞையை மீறிப் பயணித்த வாகனம் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 118 மில்லியன் ரூபா செலவில்

# சாவகச்சேரிப் பொதுச்சந்தையில் புதிய கடைத்தொகுதி நிர்மாணம்

**யாழ்ப்பாணம்,பெப்.23**

**சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தின் ஏற்பாட்டில், சாவகச்சேரி பொதுச்சந்தையின் மேற்குப் பகுதியில் புதிய இரண்டு மாடி நவீன கடைத்தொகுதியை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.**

பிள்ளையார்ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கட்டடத்துக்கான அடிக்கல்லை நகரசபையின் தலைவர் வ.சிறிப்பிரகாஸ் நட்டுவைத்தார். சாவகச்சேரி நகரசபையின் சொந்த நிதியிலிருந்து இந்தக் கட்டத்துக்கு 118 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டப் பணியில் கீழ்த்தளம் மாத்திரம் நிர்மாணிக்கப்படவுள்ளது. கீழ்த்தளத்தில் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் மொத்தம் 23 கடைகள் அமையவுள்ளன.

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலர் ச. சத்தியசோதி, சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் செ. நிசான், .சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர், ந. சர்வேஸ்வரன், கட்டடத்திணைக்களப் பொறியியலாளர் மேனன், சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர், நகரசபை உபதலைவர் ஞா.கிசோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-131)



## சென்.பற்றிக்ஸ் கல்லூரி மெய்வன்மைப் போட்டி

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 2026ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்திரு ஏ.பி. திருமகன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸ், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் நேஷன் ரஸ்ட் வங்கியின் வடபிராந்திய மக்கள் தொடர்பு முகாமையாளருமான ந.பார்த்தீபன் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்வில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. (ச)

**காணி குத்தகைக்குத் தேவை**

கொக்குவில், கோண்டாவில், உரும்பிராய், இணுவில், மருதனார்மடம் போன்ற பிரதேசங்களில் பிரதான வீதிக்கு அண்மித்ததாக உள்ள காணி குத்தகைக்குத் தேவை.

077 29 19 079

(CS 31340) A



மன்னாரில்

# குடும்பநல உத்தியோகத்தர்கள் கறுப்புப்பட்டியுடன் போராட்டம்

மன்னார்,பெப்.23

மன்னார் மாவட்ட குடும்ப நல உத்தியோகத்தர்கள், கையில் கறுப்புப்பட்டி அணிந்து, நேற்றுக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னாரில் கடமையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை கடமைக்குச் சென்ற நேரத்தில், இடைமறிக்கப்பட்டு அவரிடம் இருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்டதோடு, அவருக்கு அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது.

கடமை நேரத்தில் குறித்த குடும்ப நல உத்தியோகத்தர் வழிமறிக்கப்பட்டு, உடமைகள் அபகரிக்கப்பட்டு, கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்தும், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரியே போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையில் இருந்து மன்னார் பஜார் பகுதி வரை, பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாகச் சென்றனர். பின்னர் மாவட்டச் செயலகத்துக்கு முன் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுத்தனர். அங்கிருந்து மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் வரை பேரணியாகச் சென்று, அங்கிருந்த உயர் அதிகாரியிடம் தமது கோரிக்கைகளை முன்வைத்து மனுக் கையளித்தனர்.

மன்னார் நகரின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் தனியாக நடமாடும் இடங்களைக் கண்காணித்து, மோட்டார் சைக்கிளில் வரும் மர்ம நபர்களால், நகைகள் பறிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதுவரை இவ்வாறான 4 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (க-56)

**காணி விற்பனைக்கு**

ஓட்டுமடம் அராலி வீதியில் பிரதான வீதி முகப்புடன் யாழ்நகரில் இருந்து மூன்று கிலோ மீற்றருக்குட்பட்ட பகுதியில் சிற்றி களஞ்சியசாலைக்கு அருகாமையில் 8 (எட்டு) பரப்பு காணி விற்பனைக்குண்டு களஞ்சியசாலை, கடைத்தொதிகள் வீடு கட்ட உகந்த இடம். தரகர் தேவையில்லை

பரப்பு ஒன்றின் விலை 15 லட்சம்

உரிமையாளர் - M.பத்மராஜ்

077 482 5587, 021 225 6883

(cs.60824) N-1

**பணிப் பெண் தேவை**


நன்கு சமைக்க தெரிந்த வீட்டு வேலைகளை திறம்பட செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

Contact-077 153 2398
077 072 5056
Place - Ariyalai, Jaffna.

(CS 31338)A

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 02 . 1935



மறைவு 22 . 02 . 2026

### சந்திரசேகரி குமாரசாமி

**(கோழிப்பண்ணை குமாரசாமி)**

மாதகல் வடக்கு மாதகலைப் பிறப்பிடமாகவும் இல.66, கனகபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கோழிப்பண்ணை குமாரசாமி என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் சந்திரசேகரி குமாரசாமி அவர்கள் நேற்று (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரி - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கந்தசாமி, தெய்வானை, மாணிக்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசகுமார், குணரத்தினராஜா, இராசகுமாரி, இந்திரகுமார், இந்திரகுமாரி, ஜெயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயகுமாரி, புனிதவதி, அமரர் நாகலிங்கம், தயாளினி, கந்தசாமி, யசோதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விஜயகுமார், காயத்திரி, தர்சினி, சர்மினி, கிபாசினி, சர்வேஸ்வரன், சாளினி, நிருபன், ஜோகிதா, செந்தூரன், வள்ளுவன், தவலட்சியா, இந்திர லட்சியன், லட்சியப்பிரியா, லட்சியவதனா, பிரதாயினி, சானுயன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கரிஸ், யாதவன், ஆகீசன், ஆரியானா, ஆணவி, ஆருத்ரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (மாதகல் வடக்கு, மாதகல்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 31339)A



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 40 ஆவது பொதுப்பட்டமளிப்பின் நிறைவு நாள் அமர்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகிய பொதுப்பட்டமளிப்பு, கடந்த நான்கு நாள்களில் 12 அமர்வுகளாக நடைபெற்றது. இம்முறை 3 ஆயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகமைச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.